
06.10.2017

தினமலர்

# டெல்டா சம்பா சாகுபடிக்காக கல்லணையில் தண்ணீர் திறப்பு



தஞ்சாவூர் டெல்டா மாவட்ட சம்பா சாகுபடிக்காக :, கல்லணையில் இருந்து , நேற்று தண்ணீர் திறக்கப்பட்டது மேட்டூர் அணையில் ., 2ம் தேதி , சம்பா சாகுபடிக்காக , தண்ணீர் திறக்கப்பட்டது இந்த தண்ணீர் ., நேற்று முன்தினம் இரவு , கல்லணையை அடைந்ததுஇங்கிருந்து ., டெல்டா பாசனத்திற்காக , நேற்று காலை , 7:30 மணிக்கு, தண்ணீர் திறக்கப்பட்டது . முன்னதாக, அணையை ஒட்டி அமைந்துள்ள விநாயகர் , ஆஞ்சநேயர் கோவில்களில் , மேளதாளம் முழங்க , சிறப்பு பூஜைகள் நடத்தப்பட்டன . அமைச்சர்கள், எம்.பி., கலெக்டர்கள், பொதுப்பணித் துறை அதிகாரிகள் , மலர் தூவி அணையை திறந்தனர் காவிரியில் ., வினாடிக்கு, 4,750 கன அடி , வெண்ணாற்றில், 4,750, கல்லணை கால்வாயில், 1,300, கொள்ளிடத்தில், 1,200 கன அடி என, தண்ணீர் திறக்கப்பட்டு உள்ளது .'சம்பா மற்றும் தாளடியாக , 12 லட்சம் ஏக்கர் பாசன வசதி பெறும்' என, பொதுப்பணித் துறை அதிகாரிகள் தெரிவித்தனர் .

வேளாண் துறை அமைச்சர் , துரைக்கண்ணு கூறுகையில் , "விவசாயிகள், நீரை சிக்கனமாக பயன்படுத்த வேண்டும் ."தேவையான இடுபொருட்கள் , போதுமான அளவு இருப்பில் உள்ளன மழை பெய்து ., மேட்டூர் அணைக்கான நீர்வரத்து அதிகரிக்கும் என்ற நம்பிக்கை உள்ளது," என்றார்.

## பவானிசாகர் அணை திறப்பு : விவசாயிகள் மகிழ்ச்சி



பவானிசாகர் பவானிசாகர் அணையில் இருந்து :, நேற்று, முதல் போக சாகுபடிக்காக தண்ணீர் திறக்கப்பட்டதால் , விவசாயிகள் மகிழ்ச்சியடைந்து உள்ளனர் ஈரோடு . மாவட்டம், பவானிசாகர் அணை , 105 அடி உயரம் , 32.8 டி.சி.எம்., கொள்ளளவு கொண்டது இந்த அணை மூலம் ., கீழ்பவானி வாய்க்கால் பாசனத்தில் , 2.07 லட்சம் ஏக்கரும்; பழைய பவானி பாசனத் திட்டமான , அரக்கன் கோட்டை தடப்பள்ளி - மற்றும் காளிங்கராயன் வாய்க்கால் பாசனங்களில், 40 ஆயிரத்து, 247 ஏக்கரும் பயன் பெறுகின்றன.

2 ஆண்டுக்கு பின் பவானிசாகர் அணையில் :, ஆண்டுதோறும், ஆக., 15ல், கீழ்பவானி பாசனத்துக்கும், ஏப்ரலில், காளிங்கராயன் பாசனத்திற்கும் நீர் திறக்கப்படும் . அணையில் நீர் இருப்பு குறைவாக இருந்ததால், இரு ஆண்டுகளாக , நீர் திறக்கவில்லைநடப்பாண .ு பருவமழை பெய்து , அணையின் நீர்மட்டம் , 82 அடியாகவும், நீர் இருப்பு , 16.8 டி.சி.எம்.,யாகவும் உயர்ந்தது இதையடுத்து ., நேற்று காலை, 5:30 மணிக்கு, அணையில் இருந்து , அரக்கன் கோட்டை தடப்பள்ளி -, காளிங்கராயன் மற்றும் கீழ்பவானி பாசனத்திற்கு , அமைச்சர்கள், செங்கோட்டையன், கருப்பண்ணன் ஆகியோர் , தண்ணீர் திறந்து விட்டனர் .2,700 கன அடி தண்ணீர் வெளியேற்றப்படுகிறது.

பாபநாசம் அணை நெல்லை :, துாத்துக்குடி மாவட்ட பாசன சாகுபடிக்காக , பாபநாசம் அணையை, கலெக்டர், சந்தீப் நந்துாரி , நேற்று திறந்து வைத்தார் வினாடிக்கு ., 1,400

கன அடி தண்ணீர் வெளியேற்றப்படுகிறது .'இதன் மூலம், நெல்லை மாவட்டத்தில், 40 ஆயிரம் ஏக்கர், துாத்துக்குடி மாவட்டத்தில், 46 ஆயிரம் ஏக்கர் நிலங்கள் பாசன வசதி பெறும் .2018 மார்ச், 31 வரை, தண்ணீர் திறந்து விடப்படும் ' என, கலெக்டர் தெரிவித்தார்.

## கர்நாடகாவில் கழிவு நீரில் மல்பெரி சாகுபடி : மத்திய பட்டு வாரிய தலைவர் தகவல்



மதுரை :"பட்டு புழுக்கள் உண்ணும் மல்பெரி செடி சாகுபடியை கர்நாடகாவில் கழிவு நீரை பயன்படுத்தி அமோக விளைச்சல் பெறுகின்றனர் ," என மத்திய பட்டு வாரிய தலைவர் கே . ஹனுமந்த்ராயப்பா தெரிவித்தார்.எம். மதுரை அருகே மண்ணாடிமங்கலத்தில் மல்பெரி சாகுபடி குறித்த நிகழ்ச்சி நடந்தது மத்திய பட்டு . விவசாயி . வாரிய மதுரை ஆராய்ச்சி மைய விஞ்ஞானி டேனியல் தலைமை வகித்தார் . முருகன் முன்னிலை வகித்தார் மத்திய பட்டு வாரிய தலைவர் ஹனுமந்த்ராயப்பா பேசியதாவது:

கர்நாடகாவின் பல மாவட்டங்களில் , 1500 அடிக்கு போர்வெல் அமைத்தாலும் தண்ணீர் இல்லை அடுத்தடுத்து நான்கைந்து முறையாவது போர்வெல் அமைத்தால் . ஆனால் தேசிய அளவில் பட்டு நுால் . ஒரு இடத்தில் தண்ணீர் கிடைக்கிறது உற்பத்தியில் கர்நாடகம்60 சதவீதம், மகாராஷ்டிரா, ஆந்திரா, தமிழகம் தலா 10 சதவீதம், பிற மாநிலங்களில் 10 சதவீதம் மட்டுமே பட்டு உற்பத்தி நடக்கிறது . தமிழகத்தில்300 முதல் 400 அடி ஆழத்தில் தண்ணீர் கிடைக்கிறது எனினும் பட்டு . . நுால் உற்பத்தியில் விவசாயிகள் ஆர்வம் காட்டுவதில்லை விவசாயத்தில் மாதம்தோறும் பல லட்சம் ரூபாய் வருவாய் கிடைக்கும் ஒரே தொழில் பட்டுப்புழுக்கள் உண்ணும் மல்பெரி சாகுபடி மட்டுமே கரும்பு ., வாழை, நெல் சாகுபடிக்கு அதிகளவு தண்ணீர் தேவை மல்பெரி சாகுடிக்கு குறைந்த தண்ணீர் . இதன் மூலம் .ஆனால் அதற்கான தொழில்நுட்பத்தை பயன்படுத்த வேண்டும் .போதும்

இரண்டு ஏக்கர் மல்பெரி சாகுபடி செய்தால்6 லட்ச ரூபாய் கிடைக்கும் சில . விவசாயிகள்9 லட்ச ரூபாய் வரை வருவாய் ஈட்டுகின்றனர் இயற்கை உரங்களை . . பயன்படுத்தினால் மல்பெரி விளைச்சல் அமோகமாக இருக்கும் ஒரு பட்டுக்கூட்டில் இருந்து 1.250 மீட்டர் நீளத்திற்கு பட்டு நூல் கிடைக்கும் . பட்டுக்கூட்டில் இருந்து பட்டு நூலை பிரித்து எடுக்கும் ஏ.எம்.ஆர்., (ஆட்டோமேட்டிக் ரீலிங் மிஷின் இயந்திரத்தின் விலை ஒரு கோடி (30 லட்சம் ரூபாய் இதற்கு மத்திய . பட்டு வாரியம்65 லட்ச ரூபாய் மானியம் வழங்குகிறது பட்டு நூல் பிரித்தெடுக்கும் . .எம்.இ.எம், (மல்டி எண்ட் மிஷின் எனும் இயந்திரம் (14 லட்ச ரூபாய் இதற்கு .10 லட்ச ரூபாய் மானியம் உண்டு . வங்கிக்கடன் கிடைக்க உரிய ஏற்பாடுகள் செய்யப்படும் . கர்நாடகாவில் பட்டறிவு பயணம் மேற்கொள்ள தமிழக விவசாயிகள் அனுப்பி வைக்கப்படுவர், என்றார். மத்திய பட்டு வாரிய துணை செயலர் விஜயகுமார் , விஞ்ஞானி சிவசுப்பிரமணியன் , தொழில்நுட்ப அலுவலர் பாஸ்கரன் , பட்டு ஆலோசகர் நோபிலி மோரிசன் உடனிருந்தனர்.

**ஊட்டியில் கொட்டித் தீர்த்தது மழை!**



ஊட்டி ஊட்டி மற்றும் சுற்றுப்புற பகுதியில் :, இரண்டு மணி நேரம் கொட்டி தீர்த்த கன மழைக்கு, 500 ஏக்கர் பரப்பிலான, மலை காய்கறி தோட்டம் நீரில் மூழ்கியது நீலகிரி . மாவட்டத்தில் நடப்பாண்டில், கோடை மழை மற்றும் தென்மேற்கு பருவ மழை அதிகளவில் பெய்துள்ளது இதனால் ., தேயிலை செடிகளுக்கு ஏற்ற சீதோஷ்ண நிலை ஏற்பட்டாலும், மலை காய்கறி விவசாயத்துக்கு , பாதிப்பு ஏற்படும் நிலை ஏற்பட்டது . தென்மேற்கு பருவ மழை முடிந்து, விரைவில் வடகிழக்கு பருவ மழை துவங்க உள்ள நிலையில், சில நாட்களாக ஊட்டியில் பரவலாக மழை பெய்கிறது சில நேரங்களில் . இந்நிலையில் . கன மழையும் பெய்கிறது, ஊட்டி அடுத்துள்ள பகுதியில் , 1,000 ஏக்கர்

அளவில், கேரட், உருளைக்கிழங்கு விளைந்து , அறுவடைக்கும் தயாராக உள்ளது . நேற்று பகல் , 1:30 மணிக்கு துவங்கிய கன மழை , 3:30 மணி வரை நீடித்தது .

கப்பத்தொரையில் மலை காய்கறி தோட்டத்துக்கு இடையே உள்ள பிரதான நீரோடையில் ஏற்பட்ட அடைப்பால், தோட்டத்தில் தண்ணீர் புகுந்தது இதனால் ., 500 ஏக்கர் அளவுக்கு கேரட் , உருளைக்கிழங்கு பயிர்கள் நீரில் மூழ்கின தோட்டத்தில். புகுந்த தண்ணீரை, விவசாயிகள் பிரதான நீரோடைக்கு திருப்பி விட்டதால் , சில பகுதிகளில் உள்ள மலை காய்கறி தோட்டங்கள் தப்பின .

நீலகிரி மாவட்டம், மஞ்சூர் அடுத்துள்ள பெரியார் நகரில், ஒரு வீட்டில் மராமத்து பணி நடந்ததுஇதில் ., ராஜு, 45 என்ற தொழிலாளி பக்கவாட்டு சுவரையொட்டி , பில்லர் போடும் பணியில் ஈடுபட்டிருந்தார் பகல் ., 1:00 மணிக்கு, இடி மின்னல் தாக்கி சுவர் இடிந்து விழுந்ததுஇதில் ., ராஜு இடிப்பாடுகளில் சிக்கி இறந்தார்.

தினமணி

## தமிழக-ஆந்திர மாநிலத்தில் தொடர் கனமழை: பாலாற்றில் வெள்ளம்



தமிழக–ஆந்திர எல்லையான புல்லூர் தடுப்பணை நிரம்பி பாலாற்றில் ஏற்பட்ட வெள்ளம்

தமிழக-ஆந்திர மாநிலப் பகுதியில் தொடர்ந்து பெய்து வரும் கனமழையால் பாலாற்றில் மீண்டும் வெள்ளப் பெருக்கு ஏற்பட்டது.

தமிழக-ஆந்திர எல்லையான வாணியம்பாடியை அடுத்த புல்லூரில் பாலாற்றின் குறுக்கே ஆந்திர அரசு 12 அடி உயர தடுப்பணை கட்டியுள்ளது.

இந்நிலையில், கடந்த மாதம் தொடர்ந்து பெய்த கன மழையால் வாணியம்பாடி பகுதியில் உள்ள பாலாற்றில் 12 ஆண்டுகளுக்குப் பின் மீண்டும் வெள்ளம்

கரைபுரண்டு ஓடியது. இதனால் மாவட்டத்தில் உள்ள பெரும்பாலான ஏரிகள் , நீர்நிலைகள் வேகமாக நிரம்பின. இந்நிலையில், ஆந்திர மாநிலம் , சித்தூர், கர்னூல், குப்பம் ஆகிய பகுதிகளில் கடந்த ஒரு வாரமாக பாலாறு மற்றும் அதன் கிளை ஆறுகளான காட்டாறுகள் , சிறு ஓடைகளை ஒட்டியுள்ள பகுதிகளில் தொடர்ந்து கனமழை பெய்து வருகிறது. இதனால் தமிழக-ஆந்திர எல்லையை ஒட்டியுள்ள விஜிலாபுரம், பெரும்பள்ளம், ராமகுப்பம், வெலதிகாமணிபெண்டா, வீரணாமலை ஆகிய பகுதிகளில் உள்ள 20-க்கும் மேற்பட்ட ஏரிகள் நிரம்பின.

மேலும், பாலாற்றில் ஆந்திர அரசு கட்டியுள்ள தடுப்பணைகள் அனைத்தும் நிரம்பி , வெள்ளப் பெருக்கு ஏற்பட்டு ராஜபுரம் , பொகுள்ரே ஆகிய பகுதிகள் வழியாக புதன்கிழமை நள்ளிரவு புல்லூர் தடுப்பணைக்கு நீர் வந்து , தமிழக பாலாற்றில் வெள்ளப் பெருக்கு ஏற்பட்டது. இதன் காரணமாக , அலசந்தாபுரம், திம்மாம்பேட்டை, ராமநாயக்கன்பேட்டை, அம்பலூர், கொடையாஞ்சி, பெரியபேட்டை வழியாக வாணியம்பாடி நகரம், மேட்டுபாளையம், உதயேந்திரம் ஆகிய பகுதிகளை ஒட்டியுள்ள பாலாற்றில் வெள்ளம் கரைபுரண்டு ஓடுகிறது.

வெள்ளப் பெருக்கு காரணமாக பாலாற்றில் குளிக்கவோ , இறங்கவோ பொதுமக்களுக்கு வருவாய்த் துறை மற்றும் காவல் துறையினர் தடைவிதித்துள்ளனர். இதுபோல, ஆந்திர அரசு சார்பிலும் பாலாற்றில் வெள்ள அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

வாணியம்பாடி பகுதியில் பாலாற்றில் மீண்டும் வெள்ளம் ஏற்பட்டுள்ளதால் பொதுமக்கள் மகிழ்ச்சியடைந்தனர்.

## டெல்டா பாசனத்துக்காகக் கல்லணை திறப்பு: 4.61 லட்சம் ஹெக்டேரில் சம்பா சாகுபடிக்கு வாய்ப்பு



கல்லணையிலிருந்து காவிரியில் தண்ணீர் திறந்துவிட்ட பிறகு மலர் தூவும் அமைச்சர்கள் உள்ளிட்டோர்.

டெல்டா மாவட்டங்களின் சம்பா , தாளடி பாசனத்துக்காக கல்லணை வியாழக்கிழமை காலை திறக்கப்பட்டது. காவிரி டெல்டா பாசனத்துக்காக மேட்டூர் அணை அக். 2-ம் தேதி திறக்கப்பட்டது. இதைத் தொடர்ந்து கல்லணையில் இருந்து காவிரியில் வியாழக்கிழமை காலை 8 மணிக்கு அமைச்சர்கள் ஆர். காமராஜ் , இரா. துரைக்கண்ணு, ஓ.எஸ். மணியன் , எம்.பி.க்கள் ஆர். வைத்திலிங்கம் , ஆர்.கே. பாரதிமோகன் ஆகியோர் தண்ணீரை திறந்துவிட்டு , மலர் தூவி வணங்கினர். இதைத்தொடர்ந்து, வெண்ணாறு, கல்லணைக் கால்வாய் , கொள்ளிடத்தில் தண்ணீர் திறந்துவிட்டனர்.

காலையில் கல்லணையிலிருந்து காவிரி , வெண்ணாறு, கல்லணைக் கால்வாய் , கொள்ளிடம் ஆகியவற்றில் வினாடிக்கு தலா 1,000 கனஅடி வீதம் தண்ணீர் திறந்துவிடப்பட்டது. தண்ணீர் வரத்தைத் தொடர்ந்து மாலையில் கல்லணையிலிருந்து வினாடிக்கு காவிரி , வெண்ணாற்றில் தலா 4,750 கன அடி வீதமும் , கல்லணைக் கால்வாயில் 1,300 கன அடி வீதமும் , கொள்ளிடத்தில் 1,200 கன அடி வீதமும் தண்ணீர் திறந்துவிடப்படுகிறது. தேவைக்கேற்ப நீர் பங்கீட்டில் மாற்றம்: இந்தத் தண்ணீர் காவிரி , வெண்ணாறு, கல்லணைக் கால்வாய்களின் கடைமடைப்பகுதிகளுக்கு ஒரு வாரத்தில் சென்றடையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

மேட்டூர் அணையின் நீர்மட்டம் வியாழக்கிழமை காலை 6 மணி நிலவரப்படி 94.47 அடியாகவும், நீர் இருப்பு 57.910 டி.எம்.சி.யாகவும் உள்ளது. அக்டோபர் இறுதி வரை சம்பா சாகுபடிக்குத் தண்ணீர் தங்கு தடையின்றி வழங்க வேண்டிய நிலை உள்ளது. எனவே, நீர் பங்கீட்டில் தேவைக்கு ஏற்ப மாற்றம் செய்யப்படும் என பொதுப்பணித் துறையினர் தெரிவித்தனர். **சம்பா, தாளடி:** இதன் மூலம் , ஏறத்தாழ 4.61 லட்சம் ஹெக்டேரில் சம்பா , தாளடி சாகுபடி செய்ய வாய்ப்புள்ளது. இதுகுறித்து வேளாண்மைத் துறையினர் தெரிவித்தது:

தஞ்சாவூர் மாவட்டத்தில் சம்பா சாகுபடி 1.05 லட்சம் ஹெக்டேரிலும் , தாளடி 27,000 ஹெக்டேரிலும் சாகுபடி செய்யப்படும். இதில் , சுமார் 29,730 ஹெக்டேரில் நேரடி விதைப்பும், 1.02 லட்சம் ஹெக்டேரில் நடவும் செய்யப்படும். இதுவரை 3,480 ஹெக்டேரில் நேரடி விதைப்பு செய்யப்பட்டுள்ளது.

திருவாரூர் மாவட்டத்தில் சம்பாவில் 1,23,576 ஹெக்டேரிலும், தாளடியில் 23,324 ஹெக்டேரிலும் என மொத்தம் 1,46,900 ஹெக்டேரில் நெல் சாகுபடி செய்யத் திட்டமிடப்பட்டுள்ளது. இதில் , 1,12,800 ஹெக்டேரில் நேரடி விதைப்பும் , 34,100 ஹெக்டேரில் நடவும் செய்யப்படவுள்ளது. மாவட்டத்தில் இதுவரை 66,830

ஹெக்டேரில் நேரடி விதைப்பும் , 11,068 ஹெக்டேரில் நடவுப் பணியும் முடிவடைந்துள்ளது.

நாகை மாவட்டத்தில் சம்பா பருவத்துக்கு நேரடி விதைப்பு 50,000 ஹெக்டேரிலும், நடவு பயிர் 47,600 ஹெக்டேரிலும் என மொத்தம் 97,600 ஹெக்டேரில் நெல் சாகுபடி செய்ய இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இதில் , நேரடி விதைப்பு மூலம் 20,391 ஹெக்டேரிலும், நடவு முறையில் 3,647 ஹெக்டேரிலும் என மொத்தம் 24,038 ஹெக்டேரில் சாகுபடி செய்யப்பட்டு வருகிறது. தாளடியில் 34,100 ஹெக்டேரில் சாகுபடி செய்ய இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இதில் , 6,861 ஹெக்டேரில் நடவு செய்யப்பட்டுள்ளது. இதேபோல , புதுக்கோட்டை மாவட்டத்தில் 10,000 ஹெக்டேரிலும், கடலூர் மாவட்டத்திலும் 41,000 ஹெக்டேரிலும் சம்பா சாகுபடி செய்யப்படவுள்ளது. இந்த 5 மாவட்டங்களிலும் மொத்தம் ஏறத்தாழ 4.61 லட்சம் ஹெக்டேரில் சம்பா , தாளடி செய்ய வாய்ப்புள்ளது. **தண்ணீர் வராத நிலையில் திறப்பு:** மேட்டூர் அணையிலிருந்து அக். 2-ம் தேதி திறக்கப்பட்ட தண்ணீர் வியாழக்கிழமை காலை கல்லணைக்கு வரும் என எதிர்பார்க்கப்பட்டது. இதன் அடிப்படையில் கல்லணை திறப்பு நிகழ்ச்சி வியாழக்கிழமை காலை நடைபெறும் என அறிவிக்கப்பட்டது. ஆனால் , மேட்டூர் அணையிலிருந்து திறந்துவிடப்பட்ட தண்ணீர் வியாழக்கிழமை காலை திருச்சி மாவட்டத்தைத்தான் எட்டியது. கல்லணைக்கு தண்ணீர் வராத நிலையில் ஏற்கெனவே புஷ்கர விழாவுக்காக வந்த தண்ணீரும் , மழை நீரும் அணையில் தேங்கி இருந்தது. இதை அமைச்சர்கள் திறந்து வைத்தனர்.

இந்த விழாவில் ஆட்சியர்கள் ஆ. அண்ணாதுரை (தஞ்சாவூர்) , இல. நிர்மலராஜ் (திருவாரூர்), சீ. சுரேஷ்குமார் (நாகை) , கு. ராசாமணி (திருச்சி) , சு. கணேஷ் (புதுக்கோட்டை), அரசு கொறடா தாமரை எஸ். ராஜேந்திரன் , எம்எல்ஏக்கள் சி.வி. சேகர் (பட்டுக்கோட்டை) , எஸ். பவுன்ராஜ் (பூம்புகார்) , ராதாகிருஷ்ணன் (மயிலாடுதுறை), பாரதி (சீர்காழி) , ஜெயராமலிங்கம் (ஜெயங்கொண்டம்) , பொதுப்பணித் துறை திருச்சி மண்டலத் தலைமைப் பொறியாளர் செந்தில்குமார் , தஞ்சாவூர் கண்காணிப்புப் பொறியாளர் செல்வராஜ் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.